**களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின்- 2012**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 தீர்க்கப்படாத மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத மூலதன முற்பணங்கள் ரூபா 172,598 தொகை, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்குரிய பிடித்து வைத்தல்கள் ரூபா 73,856 தொகை மற்றும் மீளளிக்கப்பட வேண்டிய கேள்வி வைப்பு ரூபா 28,000 தொகை என்பவற்றை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி நிலமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இருப்புச் சீராக்கல் கணக்கு என ரூபா 41,505 மீதியொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

சரக் செயற்திட்டம் முற்றுப்பெற்று பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அச்செயற்திட்டத்திற்கரிய ரூபா 5,463,897 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 5,155,572 பெறுமதி தொடர்பில் மெய்மையாய்வொன்றை மேற்கொண்டு அதன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்ட 1985 இன் 02 ஆம் இலக்க தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நியதிச்சட்டம் | நியதிச்சட்டத்திலிருந்து விலகி தொல்பொருளியல் அடிப்படை பாடநெறி மற்றும் தொல்பொருளியல் இனவிருத்தி தொடர்பான டிப்ளோமா பாடநெறி என்ற பெயரில் 02 பாநெறிகள் நடாத்தப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 265,250 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 547,500 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2010 பெப்ரவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளச்செல்லலினை பதிவு செய்வதற்காக விரல் அடையாளமிடல் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் பதவியணியின் எந்த ஒருவரும் அதற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நி.பி. 371 | கருமம் நிறைவேற்றப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 237,952 தொகையான வழங்கல் மற்றும் சேவைகள் முற்பணங்கள் 01 முதல் 07 மாதங்கள் வரை மற்றும் ரூபா 315,075 மூலதன முற்பணங்கள் ½ மாதம் முதல் 10 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியிருக்காக மொழித் தேர்ச்சிப் படியாக ரூபா 60,035 செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 09/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 1997 ஏப்ரல் 01 ஆந் திகதிய 707 ஆம் இலக்க ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | ஒரு கலண்டர் மாதத்திற்கு ஒரு நாளைக்கு மாத்திரமே 1/20 படி செலுத்தப்பட முடியுமாயிருந்த போதிலும் அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு விடுமுறை தினப்படிகள் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் படி 2012 ஆம் ஆண்டிற்கான எல்லையை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 71,696 ஆகும். |
| (ஆ) | 2010 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2010 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ள பொருட்கள் விரைவாக கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் படி நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய பயன்படுத்தப்பட முடியாத 318 பொருட்களை கைதவிர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2013 மே 03 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 40,256,445 பற்றாக் குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 36,540,333 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 44,500,000 ஆன மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா. 4,243,555 மிகையாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 32,494,457 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 4,045,876 வரை குறைவடைந்திருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,289,431 முன்னேற்றத்திற்கு அரசாங்க பங்களிப்பு ரூபா 12,005,543 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கல்விசார் செயலாற்றல்

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கல்வி ஆண்டுகள் சிலவற்றில் மாணவர்கள் பதிவு, இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல் மற்றும் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) பட்டப்பின்படிப்பு தரத்திலான பாடநெறிகளை நடாத்தல்

| கல்வி ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கைவிட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை | இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை* | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சித்தியின்மை % |
|---|---|---|---|---|---|
| 2009/2010 | 93 | 04 | 61 | 53 | 15 |
| 2010/2011 | 114 | 12 | 54 | 51 | 6 |
| 2011/2012 | 174 | 02 | 48 | 44 | 8 |

* தத்துவவியல், கலாநிதி, விஞ்ஞானமானி / கலைமானிப் பாடநெறி மாணவர் நீங்கலாக

2011/2012 ஆம் கல்வியாண்டில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி மற்றும் கலைமானிப் பாடநெறிகள் 02 வீதமும் தத்துவவியல் மற்றும் கலாநிதி என்பன 01 பாடநெறி வீதமும் பட்டப்பின் படிப்பற்ற பாடநெறிகள் 02 வீதமும் நடாத்தப்பட்டிருந்ததுடன் பதிவுசெய்யப்பட்டிருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 174 ஆக காணப்பட்டது. 2011/2012 ஆம் கல்வியாண்டிற்காக மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 53 ஆனதுடன் மரபுரிமை கற்கைகள் பாடநெறிக்காக 2011/2012 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம்

நிறுவகத்தில் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பிலான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பாடநெறிகள் | கல்வி ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி | எடுத்த காலம் (மாதங்களில்) |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 2012 | 37 | 2012/07/11-12 | 2012/12/05 | 05 |
| நூதனசாலை விஞ்ஞான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 2012 | 12 | 2012/03/22-23<br>2012/07/12-13 | 2012/12/05 | 08<br>07 |
| கலைமானி (தொல்பொருளியல் விரிவுரை ஆராய்ச்சி ஊடாக) | 2012 | 24 | 212/07/24 | 2013/02/21 | 4 ½ |
| தொல்பொருளியல் உயிரிணப் பல்லின டிப்ளோமா பாடநெறி<br>Diploma in Palaeobiodiversity Part I | 2012 | 57 | 2012/07/15 | - | பெறுபேறு வெளியிடப்பட வில்லை. |

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட ஒவ்வொரு பாடநெறியினதும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 4 ½ முதல் 08 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் தொல்பொருளியல் உயிரிணப் பல்லின டிப்ளோமா பாடநெறியின் பெறுபேறு இது வரை வெளியிடப்படவில்லை.

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மை**

---

வருடந்தோரும் தங்கப் பதக்கங்களையும் பணப் பரிசில்களையும் வழங்குவதற்காக பேராசிரியர் ரோலன்ட் சில்வா அவர்களால் ரூபா 1,000,000 தொகை 2009 ஆம் ஆண்டில் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2009 யூன் 16 முதல் அப்பணம் நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. அதற்காக 2012 திசெம்பர் 31 வரை ரூபா 440,322 வட்டி வருமானம் கிடைத்திருந்தது. குறித்த நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்கான வழிமுறையொன்று நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

---

பழைய நூதனசாலைக் கட்டிடத்தின் புனர்நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 4,460,840 ஒப்பந்தப் பெறுமதிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி 2011 திசெம்பர் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 90 நாட்களிற்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும். அதன் படி 2012 மார்ச் 20 ஆந் திகதி இக்கருமம் பூர்த்திசெய்யப்பட்டுள்ள வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கருமங்கள் பூர்த்தி

செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிசார் செயன்முன்னேற்றம் 80 சத வீதமாக காணப்பட்ட போதிலும் பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. காலம் நீடிக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கைப் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பதவியணியினர் நிர்வாகம்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணியனர் அறிக்கையை நிறுவகத்தின் உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பிடுகையில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பது 2012.12.31 ஆந் திகதி அவதானிக்கப்பட்டது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | 01 | - | 01 |
| விரிவுரையாளர் (பயிலுனர்) | 05 | 04 | 01 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் -i) | 01 | - | 01 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் -ii) | 01 | - | 01 |
| கணனித் தரவுப்பதிவு உதவியாளர் (தரம் -iii) | 02 | 01 | 01 |
| | 10 | 05 | 05 |

## 3.5 ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 9,425,200 ஆக காணப்பட்டதுடன் இது தொடர்பில் நிதியமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மெதுவாக நகரும் மீதிகள்

ரூபா 1,425,513 பெறுமதியான 3112 வெளியீடுகளின் இருப்பு விற்பனை செய்வதற்காக நூலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் காட்சிப்படுத்தப்படாமையால் விற்பனையில் முன்னேற்றதினைக் காணமுடியவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

நிறுவகத்தின் 2012-2016 ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தில் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நிறுவனத்திடமுள்ள வளங்கள்

(ஆ) பலம், பலவீனம், வெளிவாரி பயமுறுத்தல்கள் மற்றும் நிறுவகத்திற்குள்ள வாய்ப்புக்கள்

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் செயற்பாட்டு விளைவுகள்

(ஈ) செயலாற்றல் அவதானிப்புகள்

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆண்டின்போது அடையப்பட வேண்டிய பிரதான செயற்பாடுகள் 27 ஆக காணப்பட்டதுடன் இச்செயற்பாடுகளை அடைந்துகொள்ளலின் செயன்முன்னேற்றம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி, செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள எதிர்பார்க்கப்பட்ட 27 செயற்பாடுகளில் ஆண்டின்போது பூரணமாக அடைந்துகொள்ளப்பட்ட செயற்பாடுகள் 10 ஆக அல்லது 37 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. இதன் படி 63 சதவீதத்திற்கும் மேற்பட்ட செயற்பாடுகளை மீளாய்வாண்டில் அடைந்துகொள்ள முடியாது போயிருந்தது.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் முதல் 843 சதவீதம் வரையான வீச்சில் பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது நிறுவகத்தின் முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் மீதான அவதானிப்புகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காமை தொடர்பில் முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 25 ஆந் திகதி வரை அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஆய்வு மானியங்கள் செலுத்துதல்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) கணக்கீடு

(ஈ) நானாவித முற்பணங்கள்

(உ) நிலையான சொத்துக்கள்